**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No.305/2011**

திரு. ராமசாமி (D.W –1) **15.4.2025**

**<u>4,13 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்து ராமத்தாளின் தகப்பனார் சுப்பையகவுண்டருக்கு பூர்விகமாக 2.6.1910 ம் ஆண்டு பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் தவறு. 15.10.1967 ல் சுப்பையகவுண்டர் இறந்துபோனார் என்றால் ஆமாம். என் மாமா முருகசாமி வாதி மற்றும் அவருடைய சகோதரிக்கு உள்ள உரிமையை மறைத்து கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் உரிமை இருப்பதாக பெயரிளவில் முருகசாமி என் பெயரில் கிரைய ஆவணத்தை ஏற்படுத்துள்ளார் என்றால் தவறு. அந்த ஆவணம் பெயரிளவில் ராமத்தாளையும் அவருடைய சகோதரியையும் ஏமாற்றவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. முருகசாமி பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம், என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் மூலம் வாதிக்கும், அவருடைய சகோதரிக்கும் தாவா சொத்தில் உள்ள பாகத்தை கட்டுப்படுத்தா என்றால் சரியல்ல. ராமத்தாள், லட்சுமி ஆகியோருக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளதால்தான் அவர்களுடைய பெயர் பட்டாவில் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து ராமத்தாளுக்கு பாத்தியப்பட்ட மூததையார் சொத்து மற்றும் வாரிசுகிரமபடி பாத்தியப்பட்டது என்பதால் தான் ராமத்தாள் அவருடைய மகன் பெயரில் லட்சுமியம்மாள் அவருடைய கணவர் பெயரிலும் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினார்கள் என்றால் தவறு. அந்த ஆவணங்கள் போலியாக ஏற்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து அபகரிக்க வேண்டி வாதி, மற்றும் அவருடைய

சகோதரி பெயரில் பொய்யாக குற்ற வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. வாதி தாவாவில் அவருக்கு உரிய பாகத்தை சரியான காலவரைக்குள்ள தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி தாவாவில் கோரியுள்ளவாறு பாகம்பெற தகுதியுடையவர்கள் என்றால் சரியல்ல. வாதியும், அவருடைய சகோதரியும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பாகவேண்டும் என்றால் சரியல்ல. முருகசாமியிடம் நான் கிரையம் பெற்ற ஆவணம் அவருடைய பாகத்தை பொறுத்தமட்டில் தான் கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.04.15 18:29:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.